திரு. ஜி. பழனிசாமி: நாளைக்கு எல்லோரும் பேசி முடித்த பிறகு கடைசியாகக் கொடுக்காதீர்கள். நாளைக்காவது முதலிலேயே அவருக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி. (குறுக்கீடு) நாளைக்கு முதலிலேயே பேசுங்கள்.

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 6-2-2004 ஆம் நாளன்று வினாக்கள்-விடைகள் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம், 'வினாக்கள்-விடைகள்' என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐத் தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும் என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்".

(குறுக்கீடு) நாம் ஏற்கெனவே எடுத்த முடிவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை.
தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

6-2-2004 அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6-2-2004) வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-29 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS